Human Resources and Skills Development Canada Ressources humaines et Développement des compétences Canada

# இப்போதும் நாளையும்

# நாங்கள் ஆற்றும் பணிகள் அனைத்திலும் சிறந்து விளங்குதல்

## கனடா கற்கை முறி

## உங்கள் பிள்ளையின் எதிர்காலத்துக்கு $500 பெற்றுக்கொள்ளவும்

**CANLEARN.CA / CIBLETUDES.CA**

Canada

## கனடா கற்கை முறி

பெற்றோர் என்ற வகையில் உங்கள் பிள்ளையின் வெற்றிக்கு உங்களால் இயன்றவரை நீங்கள் உதவுகிறீர்கள். உயர் பாடசாலைக் கல்வியை அடுத்து உங்கள் பிள்ளை பயில்வதற்குரிய கல்வியைப் பற்றி நீங்கள் ஏற்கனவே சிந்திக்கத் தொடங்கியிருக்கலாம். பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் [Registered Education Savings Plan (RESP) / Régime enregistré d'épargne-études (REEE)] மூலம் நீங்கள் சேமிப்பில் ஈடுபட கனடிய அரசாங்கத்தால் உங்களுக்கு உதவ முடியும்.

## கனடா கற்கை முறி என்றால் என்ன?

கனடா கற்கை முறி [Canada Learning Bond (CLB) / Bon d'études canadien (BEC)] என்பது, உயர் பாடசாலைக் கல்விக்கு பின்னர் உங்கள் பிள்ளை கல்வி பயில,நீங்கள் இப்பொழுதே சேமிக்கத் தொடங்க உதவியாக கனடிய அரசாங்கத்தால் வழங்கப்படும் **$500** ஆகும்.கூடுதலாக, உங்கள் பிள்ளைக்கு கரு வயதாகும் வரை ஒவ்வொரு வருடமும் **க00 $** என அதிகபட்சமாக **உ000 $** பெற இயலும்!

பின்வருவனவற்றில் முழுநேர அல்லது பகுதிநேரக் கல்விக்காகும் செலவைக் கொடுக்க இப்பணத்தைப் பயனபடுத்தலாம்:

- பணிப்பயிற்சித் திட்டங்கள்;
- CEGEPs/cégeps ;
- கல்லூரிகள்;
- தொழிற் பாடசாலைகள்; அல்லது
- பல்கலைக்கழகங்கள்

## கனடா கற்கை முறி பெறுந்தகுதி எனது பிள்ளைக்கு உண்டா?

உங்கள் பிள்ளை கனடா கற்கை முறி பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு:

- உங்கள் பிள்ளை உ00௲ டிசம்பர் ௩க-ம் தியதிக்குப் பின்னர் பிறந்திருக்க வேண்டும்; அத்துடன்

- சிறார் வரிவிலக்கு உதவிப்படி [Canada Child Tax Benefit / Prestation fiscale canadienne pour enfants] (அல்லது குடும்ப உதவிப்படி) [family allowance / allocation familiale]) என்பதற்கமைய நீங்கள் தேசிய சிறார் மேலதிக உதவிப்படி [National Child Benefit Supplement / Supplément de la Prestation nationale pour enfants] பெறுபவராக விளங்க வேண்டும்.

## கனடா அரசாங்கத்தில் நான் பெறும் வேறு உதவிப்படிகளை கனடா கற்கை முறிப் பணம் பாதிக்குமா?

கனடா கற்கை முறியும், கனடா கல்விச் சேமிப்பு மானியமும் கனடா அரசாங்கமளிக்கும் வேறு உதவிப்படிகளைப் பாதிக்காது.

## பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் என்றால் என்ன?

பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் என்பது கனடிய அரசாங்கத்திடம் பதிவுசெய்த கல்விச் சேமிப்புக் கணக்காகும். உயர் பாடசாலைக் கல்வியை அடுத்து உங்கள் பிள்ளை கல்வி பயில நீங்களோ, உங்கள் குடும்பமோ, நண்பர்களோ பணம் சேமிக்க அது உதவும்.

கனடா கற்கை முறிப் பணத்தை ஒரு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கில் மட்டுமே வைத்திட முடியும். அதனைப் பெற்றுக்கொள்வதற்கு உங்கள் சொந்தப் பணம் எதையும் நீங்கள் இட வேண்டியதில்லை.

வங்கி அல்லது கூட்டுறவு நிதியகம் போன்ற ஒரு நிதி நிறுவனத்தில் அல்லது சான்றிதழ்பெற்ற ஒரு நிதித் திட்டமிடுநர் அல்லது குழுமத் திட்டம் கையாளுநர் ஊடாக நீங்கள் ஒரு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கைத் திறக்கலாம். இந்நிறுவனங்களும், திட்டமிடுநர்களும், கையாளுநர்களும் “பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்புகள் [RESP provider / fournisseur de REEE] என அழைக்கப்படுகிறார்கள்."

## எனது பிள்ளையின் கல்விக்கு நான் ஏன் சேமிக்க வேண்டும்?

சேமித்தால் பலன் உண்டு! பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் எதையும் கொண்டு, உங்கள் பிள்ளையின் கனவு நனவாக நீங்கள் உதவலாம். தினமும் ஒரு டாலர் சேமித்தால் கூட பெரிய காரியங்களை சாதிக்கலாம்.

உங்கள் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட உதவித்தொகைகளுடன், பின்வருவனவற்றையும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்:

- கனடா கற்கை முறி; அத்துடன்/அல்லது
- கனடா கல்விச் சேமிப்பு மானியம்

## கனடா கல்விச் சேமிப்பு மானியம் என்றால் என்ன?

கனடா கல்விச் சேமிப்பு மானியம் [Canada Education Savings Grant / Subvention canadienne pour l’épargne-études] என்பது கனடிய அரசாங்கம் உங்கள் பிள்ளையின் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்தில் வைத்திடும் பணம் ஆகும். உங்கள் பிள்ளையின் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்துக்கு நீங்கள் செலுத்தும் உதவித்தொகை மற்றும் உங்கள் குடும்பத்தின் மொத்த வருமானம் என்பவற்றைப் பொறுத்து, அத்தொகை ஆண்டுக்கு கூ00$ வரை ஆகக்கூடும்.

## நான் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கு ஒன்றைத் திறந்து கனடிய அரசாங்க மானியம் பெறுவது எப்படி?

படி க – உங்கள் பிள்ளைக்கு **சமூக காப்புறுதி இலக்கம்** [Social Insurance Number (SIN) / Numéro d'assurance sociale (NAS)] ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும். அது இலவசம். மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்: 1 800 O-Canada (1-800-622-6232). அல்லது உங்களுக்கு அருகிலுள்ள கனடா சேவை நிலையம் [Service Canada Centre / Centre service Canada] ஒன்றுக்குச் செல்லவும்.

படி உ – பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கு ஒன்றைத் திறப்பதற்கு, உங்களுக்கு விருப்பமான, **கனடா கற்கை முறி அளிக்க முன்வரும்** பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்பு ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் தேவைகளுக்கு மிகவும் உகந்த பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்பைத் தெரிவுசெய்து, பின்வருமாறு கேட்கவும்:

- கனடா கற்கை முறி மற்றும் கனடா கல்விச் சேமிப்பு மானியம் என்பவற்றை அவர்கள் வழங்க முன்வருகிறார்களா;
- எவ்வகையான பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டங்களை (குடும்பம், தனிநபர் அல்லது குழுமத் திட்டங்கள்) அவர்கள் வழங்க முன்வருகிறார்கள், அவை ஒவ்வொன்றின் பயன்கள் மற்றும் பாதிப்பு விளையும் வாய்ப்புகள் எவை;
- எத்தகைய முதலீட்டு வகைகளை அவர்கள் வழங்க முன்வருகிறார்கள், அவை ஒவ்வொன்றின் பயன்கள், பாதிப்பு விளையும் வாய்ப்புகள் எவை; அத்துடன்
- அவர்களுடைய நிர்வாகக் கட்டணங்கள், தண்டங்கள் எவை.

உங்கள் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்பிடம் [RESP provider / fournisseur de REEE]. நீங்கள் கேட்கவேண்டிய வினாக்களின் நிரலுக்கு CanLearn.ca (ஆங்கிலம்) அல்லது Cibletudes.ca (பிரெஞ்சு) இணையத்தளத்தை நடவும்.

**படி – ௩** பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கு ஒன்றைத் திறந்து, உங்கள் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்பின் உதவியுடன் கனடா கற்கை முறி விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும்.

## நான் எங்கே உதவி அல்லது மேலதிக விபரங்கள் பெறலாம்?

(ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் மட்டும்)

1 800 O-Canada (1-800-622-6232)

TTY/ATS (தொலைத்தட்டெழுத்துப்பொறி): 1-800-926-9105

CanLearn.ca (ஆங்கிலம்) அல்லது Cibletudes.ca (பிரெஞ்சு)

உங்களுக்கு அருகிலுள்ள கனடா சேவை நிலையம் [Service Canada Centre / Centre service Canada]

## ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் சேவை கிடைக்கும்

பின்வரும் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு இந்த வெளியீட்டை நீங்கள் தருவிக்கலாம்:

**வெளியீட்டுச் சேவை**
**மனித வளங்கள் மற்றும் திறன்கள் மேம்பாடு கனடா**
**Publishing Services / Services des publications**
**Human Resources and Skills Development Canada / Ressources humaines et Développement des compétences Canada**
140 Promenade du Portage
Portage IV, 12th Floor
Gatineau, Québec
K1A 0J9

தொலைநகல்: 819-953-7260

இணையத்தளம்: **http://www12.hrsdc.gc.ca (ஆங்கிலம்)** அல்லது **http://www12.rhdcc.gc.ca (பிரெஞ்சு)**

1 800 O-Canada (1-800-622-6232) என் னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, இந்த ஆவணத்தை நாடிக் கோரிக்கை விடுத்தால், இது மாற்று வடிவங்களில் (பெரிய அச்செழுத்திலோ, தொடுகை அச்செழுத்திலோ, ஒலிப்பேழையிலோ, இறுவட்டிலோ, மின்ம உரை வட்டிலோ, மின்ம உரை இறுவட்டிலோ, DAISY உருவிலோ) கிடைக்கும். நீங்கள் தொலைத்தட்டெழுத்துப்பொறி (TTY/ATS) பயனபடுத்துபவா் என்றால் 1-800-926-9105 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

© பதிப்புரிமை: கனடாவின் ஆட்சியாளா் என்ற வகையில் மாட்சிமை தங்கிய அரசி, உ0கக